
# ஆளுமை



திருமதி.இராஜினி தேவராஜன்

(உளவியல் - பட்டயச் சான்றிதழ்க் கற்கை நெறி)

# ஆளுமை

- ஆளுமை என்றால் என்ன?
- ஆளுமை வளர்ச்சி
- ஆளுமைக் கோளாறுகள்

திருமதி.இராஜினி தேவராஜன்
(உளவியல்-பட்டயச் சான்றிதழ்க் கற்கை நெறி)

தலைப்பு : ஆளுமை

ஆசிரியர் : திருமதி.இராஜினி.தேவராஜன்
(உளவியல் பட்டயச் சான்றிதழ்க் கற்கை நெறி)
(+94) (0776878520)
(+94) (0786447970)

முகவரி : திருமதி.ஆர்.லோகநாதன் மே/பா
34-1/3, எபனேசர் பிளேஸ்
`ஸ்பான் டவர்`
தெகிவளை

உரிமை : ஆசிரியருக்கே

பதிப்பு : 2019

அச்சிட்டோர் :

விலை : Rs.375/=

# பொருளடக்கம்

1. ஆளுமை என்றால் என்ன?

2. சிக்மன் பிராய்டின் கோட்பாடும் விளக்கமும்
   நனவிலி, நனவு, நனவடி

3. ஆளுமை வளர்ச்சி

4. ஆளுமையில் ஏற்படும் பாதிப்புகளும் விளைவுகளும்

5. ஆண்களிடமும் பெண்களிடமும் காணப்படும் இருபால் பண்புகளின் விளக்கங்கள்

6. ஆளுமைக் கோளாறுகளும் நடத்தைக் கோலங்களும்

7. தனியாள் ஆளுமை வளர்ச்சி
   - ஒரு மீள் பார்வை

# பரிந்துரைச் செய்தி

**ஆளுமைகளும் உறவுகளும் :**

ஆளுமை என்பது ஒரு மனிதன் தன்னை அடையாளப் படுத்தலில் இன்றியமையாத கூறாகும். அது அவனது வாழ்வியல் மற்றும் தொழில் வகிபாகத்தில் பெரும் பங்களிப்பினைச் செய்கின்றது.

ஆளுமை என்பது எண்ணங்கள், உணர்ச்சிகள் மற்றும் நடத்தைகள் என்பவற்றின் பிரதிபலிப்பாக அமையப்பெற்றது என்றால் மிகையாகாது. இது ஒருவனைத் தனித்துக் காட்டுவதில் இன்றியமையாத ஒன்றாக அமைந்துள்ளது. ஆளுமைக் கூறுகள் என்பது நாம் பலரில் அவதானிக்கக் கூடிய ஒன்றாகும். ஆனால் ஆளுமைக் கோளாறுகள் என்பது நோய்நிலை வெளிப்பாடாகும். இது ஒரு சிலரில் அவதானிக்கப்படுகின்ற நிலைப்பாடாகும். இவ்விரண்டையும் வேறுபடுத்தி அறிந்து கொள்வது மிக முக்கியம். ஏனெனில், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பலர், தேவையில்லாமல் ஆளுமைக் கோளாறுகளால் அடையாளப்படுத்தப்படுகின்ற நிலைமை காணப்படுகின்றது.

சில ஆளுமைக் கோளாறுகள் பெண்களில் அதிகமாகவும், வேறு சில ஆண்களில் அதிகமாகவும் காணப்படுகின்றன. சமூக விரோத ஆளுமை (Anti Social Personality) பெருமளவில் ஆண்களிலும், நிலையற்ற உணர்ச்சி ஆளுமை (Emotionally unstable personality) பெண்களிலும் அதிகமாகக் காணப்படுவதை நாம் காணலாம்.

ஆளுமையின் வெளிப்பாடு என்பது பரம்பரைக் காரணிகளிலும் சூழலியற் காரணிகளிலும் தங்கியுள்ளது. இது பலவிதமான காரணிகளால் நிர்ணயிக்கப்படுகின்றது என்பது இங்கு

குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஆளுமைக் கூறுகள் பொதுவாக பிரதான ஐந்து ஆளுமைக் கோட்பாடுகளினால் வரையறை செய்யப்படுகின்றன. ஆளுமைக் கூறுகள் மனித உறவில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

உறவினை ஏற்படுத்துவதில் ஆளுமைக் கூறுகள் பெரும்பங்கு வகிக்கின்றன.

ஆளுமைக் கோளாறுகளைப் பற்றித் தமிழில் ஒருவரும் எழுத முன்வராத சூழலில் அதனைத் தற்துணிவுடன் தமிழில் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ள திருமதி.இராஜினி தேவராஜன் என்ற உளவியல் ஆர்வலர் பாராட்டுக்குரியவர்.

அவர் இத்துறையில் மேலும் பல கட்டுரைகளையும் சில நூல்களையும் வெளியிட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். ஓய்வு பெற்று வாழ்க்கையின் இளைப்பாறு பருவத்திலும் ஆர்வமுடன் இத்தகைய முயற்சியில் மேற்கொள்ள விளைவது பாராட்டுக் குரியதாகும். இதனைத் தமிழ்ப் பரப்பில் வெளியிடுவதென்பது ஒரு வரப்பிரசாதமே ஆகும்.

**மருத்துவர்.எஸ்.சிவதாஸ்**
**உள மருத்துவ நிபுணர்**
**யாழ்.போதனா வைத்தியசாலை.**

# என்னுரை

ஒரு சாதாரண மனிதனின் கருத்துப்பதிவில் 'ஆளுமை' என்ற பதம், வெறுமனே ஒரு தனியனின் வெளித்தோற்றம் என்றே இன்றும் பேசப்படுவதைக் காண்கின்றோம்.

உளத்தில் அக உளம், புற உளம் என்று இரண்டு உள்ளது. அக உளம் அழிவற்றது. அது உள்ளக்கிளர்ச்சிகளின் இருப்பிடம். கடந்த கால நினைவுகளின் களஞ்சியம். வலிமை மிக்கது.

அக உளத்துக்கும் புற உளத்துக்கும் இடையே முரண்பாடு ஏற்படும் போது, அச் சந்தர்ப்ப சூழ்நிலையில் வெளிப்படும் அக உளத்தின் (நனவிலி மனதின்) எழுச்சியானது மனிதனைத் தொழிற்படச் செய்கின்றது. இச்செயற்பாட்டின் போது, நனவிலி ஒடுக்கல்களின் எதிர்வினையே உடல், குரல் நாண், பேச்சு, மொழி, செயல், தோற்றம் (Appearance) எல்லாவற்றின் மூலமாகவும் வெளிப்படுகின்றன. இது தனித்துவமானது (Unique). இப் பண்பு, ஒரு தனியனை ஏனையவர்களிடம் இருந்து பிரித்துக்காட்டுவது ஆகும்.

இதுவே அத் தனியனின் ஆளுமை எனப்படுகின்றது.

குழந்தைப் பருவ நிலைத்தல்களே ஒரு தனிமனிதனின் ஆளுமைப் பண்புகளாக உருவெடுக்கின்றது எனவும் இவை பரம்பரைக் காரணிகளாலும் சூழற்காரணிகளாலும் பாதிப்படைகின்றன எனவும் குழந்தைப் பருவம் கட்டமைத்த ஆளுமை மாறுதலுக்கு உட்படாது எனவும் இயக்காற்றல் உளவியலின் தந்தையான சிக்மன் பிராய்ட் தனது ஆய்வின் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

'ஆளுமை' பற்றிய பரந்த விரிந்த விளக்கத்தினை, உளவியல் பட்டயச் சான்றிதழ்க் கற்கை நெறிமூலம், Institute of social Technical Studies, Maruthamunai Kalmunai நிறுவனத்தினரிடமிருந்து, தபால் மூலம் யான் பெற்றுக்கொண்ட 'யதார்த்தம் நிறைந்த அறிவினை முடிந்தவரை சுருக்கமாகத் தந்தளித்து, அத்தோடு ஆளுமைக் கோளாறுகளையும் அக் கோளாறுகளை உடையவர்கள் வெளிப்படுத்தும் அசாதாரண நடத்தைகளையும் கூடவே, ஆர்வலர்களுக்கு அறியத்தரும் வகையிலும் விளங்கக் கூடிய வகையிலும் எழுதியுள்ளேன்.

இப் புத்தகத்தினைப் படித்துப் பரிந்துரைச் செய்தியை (Recommendation Message) வழங்கிய டாக்டர் எஸ்.சிவதாஸ்(consultant psychiatrist) அவர்களுக்கும் எனக்கு இந்த அறிவினைப் புகட்டிய மேற்கூறிய கல்விக் கூடத்துக்கும் இப் புத்தகத்தை அச்சிட்டுப் பதிப்பித்து உதவிய ................ எனது நன்றியை இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

படிப்பவர்கள் பயன் பெறவும் ஆர்வலர்கள் அறிவு பெருகவும் இப் புகத்தகம் வழிவகுக்கும் என்ற நம்பிக்கையுடன்...

**திருமதி.இராஜினி தேவராஜன்**
**08.11.2019**

# 'ஆளுமை' என்றால் என்ன ?

ஆளுமை' என்ற பதம் எல்லோராலும் பயன்படுத்தப்படாத நிலையில் 'பர்சனாலிட்டி' (Personality) என்று கூறும்போதே அது எல்லோருக்கும் தெளிவாகின்றது.

Personality என்ற ஆங்கிலச் சொல் Personare என்ற லத்தீன் மொழிச் சொல்லிலிருந்து பிறந்தது.

இது ஒரு குரல் வழி நடிப்பு வெளிப்பாடு எனக் கூறலாம்.

ஒருவன் மேடையில் உண்மை உருவத்தை மறைப்பதற்காக அணிகின்ற மறைப்புகளைப் போன்றது.

'சொல்' என்ற முறையில் அது 'வேடம்' அவரது 'வகிபங்கு', 'பிறர் அவரைப் பற்றி என்ன எண்ணுகின்றார்கள்' என்பவற்றை அடக்குவதாகும்.

முன்னைய காலத்தில், ஒருவனின் பண்புகளை வெளிப்படுத்தும் வெளித்தோற்றமே 'ஆளுமை' எனப்பட்டது.

இன்று 'ஆளுமை' என்பதன் வரைவிலக்கணங்களை உளவியலாளர்கள் பல்வேறு வகையில் கூறி இருக்கின்றார்கள்.

*"ஆளுமையானது ஒருவனது தனித்தன்மை வாய்ந்த அமைப்பு"*

*"ஒரு குறிப்பிட்ட சூழலில் ஒருவர் எவ்வாறு நடந்து கொள்வார் என்பதை முன் கூட்டியே தெரியப்படுத்துவது ஆளுமை"*

''ஒரு சந்தர்ப்ப சூழ்நிலையில் ஒருவர் துலங்கும் போது, அவர் வெளிப்படுத்தும் உடல், உளச் செயற்பாடுகளின் ஒருங்கமைப்பு''

''ஆளுமை என்பது சூழலுக்குப் பொருத்தமான விதத்தில் உண்டாகும் தனிச்சிறப்புகளுடன் கூடிய சீராக்கம் அல்லது சீராக்கத்தைத் தீர்மானிக்கும் தனிப்பட்ட ஒருவரிடம் ஒருவரிடம் இருக்கும் உளவியல் முறைகளின் செறிவான ஒழுங்கமைப்பு''

''ஆளுமை என்பது தனிப்பட்டவர்களிடம் காணப்டும் அமைப்புகளினதும் நடத்தைக் கோட்பாடுகளினதும் விருப்பு, மனப்பாங்கு, ஆற்றல்கள், திறன்கள், உளச் சார்புகள் என்பவற்றின் மிகச் சக்தியுள்ள பண்புகளின் ஒன்றிணைப்பு ஆகும்.''

என்பவை வெவ்வேறு உளவியலாளர்களின் கருத்தாக அமைகின்றது.

**Personality = Person + Ability**

ஒரு தனியனுடைய திறனே ஆளுமை எனப்படுகிறது.

நாம் பேசும் போது சாதாரணக் கருத்தில் உயரம், தோற்றம், அழகிய உருவம் கொண்ட ஒருவரையே சிறந்த ஆளுமை (personality) கொண்டவர் என்கின்றோம்.

இதன் அடிப்படையில் சிலரிடம் ஆளுமை உண்டு, ஏனையவரிடம் ஆளுமை இல்லை என்று ஆகின்றது. இங்கு உடற்கட்டு, உடல் அழகு, எழுத்து, பேச்சு, நடை, உடை ஆகிய இயல்புகள் ஆளுமையின் அளவுகோல்கள் ஆகின்றன.

உளவியலாளர் கருத்துப்படி ஆளுமையானது எல்லோருக்கும் உள்ள, தனியாளிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாத, விரிந்து விட்ட, உறுதியான நடத்தை முறைகளின் தொகுப்பு ஆகும்.

எனவே, ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உரிய தனித்துவமான பண்புகளின் (Unique) கூட்டுத் தொகுதி எனலாம்.

## ஒருவரின் ஆளுமையில் பாதிப்புக்கள்

தனித்துவமான பண்புகளைக் கொண்ட ஒருவனின் குணவில்புகள் என்ற ஆளுமைப் பண்புகளில் பரம்பரைக் காரணிகளும், சூழற் காரணிகளும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

❒ ❒ ❒

# சிக்மன் பிராய்டின் கோட்பாடும் விளக்கமும்

இயக்காற்றல் உளவியலின் (Dynamic Psychology) தந்தை என அழைக்கப்படும் சிக்மன் பிராய்ட்டின் ஆளுமைக் கோட்பாட்டை விரிவாகப் பார்ப்போம்.

அவரது கோட்பாடு நனவிலி நிர்ணயத்தை ஆதாரமாகக் கொண்டது. (Unconscious Determinism) ஆகும்.

## நனவிலி

நனவிலி மனமே மனித ஆளுமையைத் தீர்மானிக்கிறது என்பது இவரின் கருத்தாகும்.

இவரைப் பொறுத்தவரையில் குழந்தைப் பருவத்திலேயே ஆளுமை கட்டமைந்து விடுகிறது.

குழந்தைப் பருவத்தில் ஆழ்மனதில் அதாவது நனவிலி மனத்தில் கட்டமைந்த எண்ணங்கள், உணர்வுகள் தான் ஆளுமை ஆகின்றன என்பது அவரது கருத்தாகும். குழந்தைப் பருவ அனுபவங்கள் உள்ளத்தை ஒருவித அமைப்புக்குள் கட்டமைத்து விடுவதால் தனியாளின் ஆளுமை அமைப்பு உள்ளத்தையே அடிப்படையாகக் கொண்டு அமைந்துவிடுகின்றது.

பிராய்ட்டின் உளப்பகுப்பு ஆய்வு அணுகு முறையில் உளமானது மூன்றுவெவ்வேறு பகுதிகளால் அமைக்கப்பட்ட கட்டமைப்பு எனப்படுகிறது.

## உளம் அல்லது மனம்




உளமானது நனவு, நனவடி, நனவிலி என மூன்று பகுதிகளாலானது என்கிறார்.

- 'நனவடி', 'நனவிலி'யின் ஒரு பகுதியாகும். 'நனவு' சாதாரண விழிப்பு நிலையில் உளம் ஆகும்.
- 'நனவிலி' ஆழ்துயிலில் நனவு அற்ற நிலையில் உளம் ஆகும்.
- 'நனவடி' என்பது மயக்க நிலை ஆகும்.

நனவிலி மனதில் பிள்ளைப் பருவத்தின் அனுபவங்கள் ஆழமாக நிலைத்து நிற்கின்றன. இந் நிலைத்தல்களே (Fixations) முதிர்ச்சி அடைந்த நிலையில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உணர்ச்சி வெளிப்பாடாகி அத் தனியனின் ஆளுமையை வெளிப்படுத்துகின்றன.

எனவே, இந் நனவிலி மனம் மனித ஆளுமையின் மூலாதாரம் எனவும் வலிமை மிக்க பகுதி எனவும் கூறுகின்றார்.

இது ஆக்க ஆசை, அழிவாசை என்ற இரு கூறுகளைக் கொண்டது. முழுமையாக உட்தன்மை வாய்ந்த இது, ஏற்றுக் கொள்ள முடியாத தூண்டல்கள் உருவாகும் இடம்.

❒ ❒ ❒

## ஆளுமை வளர்ச்சி

குழந்தைப் பருவத்திலிருந்து ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் மாறுதல்கள் ஏற்பட்டு, உணர்வுகள் நிலைக்கப்பெற்று, தூண்டல்களுக்கேற்ப உணர்ச்சி வெளிப்பாடுகள் தோன்றுகின்றன.

இதனை உளப்பாலியல் வளர்ச்சி (Psycho Sexual Development) என்று கூறுகிறார்.

இது வாய்வழி இன்பநிலை (The Oral stage) குதவழி இன்பநிலை (The Anal Stage), இலிங்க வழிக்கட்டம் (The Phallic Stage) பாலுறைக் காலம் (Latency Period), பாற்குறிக் கட்டம் (Genital Stage) என்ற ஐந்து நிலைகளூடாக வளர்ச்சி பெறுகிறது.

குழந்தைப் பருவத்தில் ஏதாவது ஒரு குறிப்பிட்ட தேவை மிகையாகக் கிடைத்தாலோ அல்லது தேவையான அளவு கிடைக்காமல்

மனவிரக்தி ஏற்பட்டாலோ அக் குழந்தை வளர்ந்த பின் அதனிடம் சில ஆளுமைக் கூறுகள் குறைந்தோ அல்லது மிகுந்தோ காணப்படுகின்றது. இதுவே உளவியலின் தந்தையான பிராய்ட் அவர்களால் 'நிலைத்தல்கள்' (Fixations) எனக் கூறப்பட்டது.

| வயது எல்லை | | வளர்ச்சிக்கட்டம் |
|---|---|---|
| பிறப்பு ⟶ 2 வயது | - | வாய்வழி இன்பநிலை |
| 2 வயது ⟶ 3 வயது | - | குதவழி இன்பநிலை |
| 3 வயது ⟶ 6 வயது | - | இலிங்க வழிக் கட்டம் |
| 7 வயது ⟶ 11 வயது | - | பாலுறைக் காலம் |
| 11 வயது | - | பாற்குறிக் கட்டம். |

இந்த ஐந்தாவது பருவத்திற்கு மேலாகவும் மனிதர்களின் முன்னைய பருவங்களின் நிலைத்தல்கள் காணப்படின் அதனை 'இளங்குழந்தைத் தனம்' என்கிறார்.

முதல் மூன்று பருவங்களிலும், குழந்தை, போதியளவிலான திருப்தியைப் பெறுவதற்கு இடமளிக்க வேண்டும் என்று பிராய்ட்ட கூறுகிறார். படிப்படியாக வளர்ச்சி பெறும் இவ் வளர்ச்சி முறையில் வயதிற்கும் பருவத்திற்கும் ஏற்ப, பாலின்பம் மாற்றம் பெற்று வளர்கின்றது எனவும், இதனூடே முறிவு (Frustration), தடங்கல் (Disturbance), பாதிப்பு (Affect) ஏற்பட்டாலேயே வளர்ச்சியில் தொய்வு ஏற்படுகின்றது. அதுவே சிக்கலாகவும் நோய் அறிகுறிக் காரணியாகவும் அமைகின்றது எனவும் கூறுகின்றார்.

எனவே, குழந்தைப் பருவமே ஒருவனுடைய ஆளுமையைத் தீர்மானிக்கின்றது. குழந்தைப் பருவம் கட்டமைத்த ஆளுமை மாறுதலுக்கு உட்படாது என பிராய்ட் வலியுறுத்துகிறார்.

## நனவு மனம்

நனவு மனமானது பண்படா உள்ளமான நனவிலி மனதின் உந்துகளை, வாழ்க்கையின் மெய்நிலைகளுடன் இணைத்து செயற்படுவது ஆகும். இது புற உலகத்தோடு உள்ள நடவடிக்கைகளில் தொடர்பு கொள்ளும் ஒரு பகுதியாகும். இது சந்தர்ப்ப சூழ்நிலைகளுடன் இணைந்து வாழ்க்கையின் சட்ட திட்டங்களுக்கு ஏற்றவாறு செயற்படுகின்றது. இது நனவிலி மனதுக்கும் நனவடி மனதுக்கும் இடையே ஒரு பொறுப்பாளராகத் தொழிற்படுகிறது. நனவு மனம் மனிதனைத் தண்டனையில் இருந்து தப்புவிக்கின்றது. இதனால் ஆளுமையின் நிறைவேற்று அதிகாரியாகச் செயற்படுகிறது.

`பிராய்டின் கருத்துப்படி ஒரு தனியனது ஆளுமையானது உண்மைத்துவத்துக்கும் இன்பம் காணும் தத்துவதுக்குமிடையே ஏற்படும் போராட்டங்களின் அடிப்படையில் உணரப்படும்.

## நனவடி

நனவடியானது ஒரு நீதிபதி போல் செயற்படுகின்றது. இது பெற்றோர்களாலும் சமூகத்தாலும் எடுத்துரைக்கப்பட்ட அறநெறிகளும் பயன்மதிப்புகளும் அடங்கியது.

நனவு மனதின் விருப்பங்களும் செயல்களும் சமூக சமய கட்டுத் திட்டங்களுக்கு ஏற்றவை தானா என்பதை தீர்மானிப்பது நனவடி ஆகும்.

நனவு நிலையில் முகம் கொடுக்கும் உந்துகளைச் சமாளிப்பதில், நனவு மனதுக்கும் நனவடிக்கும் இடையே போராட்டம் ஏற்படும். நனவடியானது நனவு மனதின் மீது ஆதிக்கத்தைச் செலுத்திக் கொண்டே இருக்கும் போது, தனிமனிதனின் ஆளுமை பாதிக்கப்பட்டு வலிமை அற்றவனாவதுண்டு.

நனவு மனம் வலிமை பொருந்தியதாக இருப்பதே ஒரு தனிமனிதனின் ஆளுமைச் சமநிலைக்கு ஏற்றது என்று உளவியலாளர்கள் கருதுகின்றார்கள்.

ஆழ்மனதின் (நனவிலி) உந்துகளையும் நனவடியின் கட்டளைகளையும் மீறி, மேலோங்கி நிற்கும் நனவு நிலை மனமானது, ஒரு தனிமனிதனுக்கு சமூகத்தின் இயல்புகள், இணைப்புகள், முரண்பாடுகள் ஆகியவற்றைச் சமாளிக்கும் திறனைக் கொடுக்கின்றது.

நனவடியானது இரண்டு கூறுகளைக் கொண்டது. ஒன்று பண்பாட்டு விலக்குகள். அதுவே மனசாட்சி எனப்படுகிறது.

மற்றையது உடன்பாட்டு விதிகள். அது சுய கருத்தியல் எனலாம்.

நனவடியின் ஆணைகளை எதிர்த்து இயங்கும் ஆழ்மன (நனவிலி) உந்துகள், நனவு நிலையில் குற்ற உணர்வு, தண்டனை விருப்பு, பதற்றம் போன்ற உளநிலைகளை ஏற்படுத்துகின்றன.

கசப்பான சூழ்நிலைகள் நனவு நிலை மனதுக்கு பதற்ற நிலயை ஏற்படுத்தும். இந்நிலையில் அதுவே தற்காப்பு வழிமுறைகளைக் கையாண்டு, பதற்ற நிலை ஏற்படாதவாறு செய்து, கசப்பான அனுபவங்களினால் தனக்கு ஏற்படக்கூடிய ஆளுமைச் சிதைவைத் தானே தடுத்துக் கொள்கிறது.

❐ ❐ ❐

# ஆளுமையில் ஏற்படும் பாதிப்புகளும் விளைவுகளும்

ஒரு மனிதனின் பண்புக் கூறுகளிலிருந்து அவனது தனித்தன்மையை அறியலாம்.

இப் பண்புக் கூறுகள் அடிப்படைக் கூறுகள், வழிநிலைப் பண்புகள் என இருவகைகளாக ஒவ்வொருவரிடமும் காணப்படுகிறது.

- பரம்பரைக் காரணிகளாலான பண்புக் கூறுகள் அடிப்படைக் கூறுகள் ஆகும்.
- குழந்தைப் பருவ அனுபவங்களும், சூழற் காரணிகளின் தாக்கங்களும் வழிநிலைப் பண்புகளாகும்.

குழந்தைப்பருவம் முதல் ஏற்படும் கற்றல், அறிதல், ஊக்குவிப்பு ஆகியன சிறப்பானதொரு மாற்றத்தை ஒருவனது ஆளுமையில் ஏற்படுத்துகின்றன.

ஒருவனது ஆளுமையில் இரண்டு நிலைகள் காணப்படுகின்றன.

1. ஒற்றை ஆளுமை (Single Personality)
2. சிக்கல் ஆளுமை (Complex Personality)

உதாரணமாக நாம் ஒருவரைப் பார்த்து அவர் ஒரு நல்ல மனிதர் என்பது ஒற்றை ஆளுமை.

அதேசமயம் நாம் ஒருவரைப் பார்த்து அவர் ஒரு நல்ல மனிதர். ஆனால், அவர் ஒரு பொய்யன் எனக் கூறும் போது அது

சிக்கல் ஆளுமை ஆகும். நேரெதிரான பண்புகளின் தொகுப்பாக அவரது ஆளுமை இங்கு அமைகிறது.

பதற்றம், புறத்தேற்றம், விளைவாக்கம், இடமாற்றம், மேம்படுத்தல் ஆகிய வெளிப்படையான துலங்கல்களை வேறுபட்ட ஆளுமைகளில் காணக்கூடியதாக உள்ளது.

உளவியலாளர் பிராய்ட், வேறுபட்ட சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தப்படும் பதற்ற நிலையை மூன்று வகைகளாக விளக்குகிறார்.

1. புறவயப் பதற்றம் (Objective Anxiety)
இது அச்சம் காரணமாக இதமளிக்காத மனவெழுச்சிகள் தோன்றும் போது ஏற்படுவது ஆகும்.

2. உளக்கோளாறு சார் பதற்றம் (Neurotic Anxiety)
நனவிலி மனதின் நிலைத்தல்களைக் கண்டு நனவு மனம் அச்சம் கொள்ளும் போது ஏற்படுவது ஆகும்.

3. அறநெறிப் பதற்றம் (Moral Anxiety)
தன்மதிப்பிழந்தல், குற்ற உணர்வு, தண்டனை விளைவு என்பவற்றை அனுபவிப்பது நனவடியாகும். நனவடியானது இத்தகைய உணர்ச்சிகளால் வலுவடையும் போது, அத்தகைய உணர்ச்சிகள் பதற்ற நிலையை தோற்றுவிக்கின்றது.

இம்மூன்று வகையான பதற்ற நிலைகளும் ஒருவனுக்கு ஏற்படும் போது, மன உளைச்சல் அளவுக்குமேல் அதிகமாகி உளக்கோளாறை ஏற்படுத்திவிடும்.

அப்பொழுது சுயமுனைப்பினால் தற்காப்பை ஏற்படுத்துமுகமாக நனவிலி மனதிற்குத் தள்ளிவிடுகிறது. இதுவே 'ஒடுக்கல்' எனப்படும்.

இவ்வாறு நனவிலி மனதில் ஒடுக்கப்பட்ட கசப்பான உணர்வுகள், அனுபவங்கள் நனவிலி மனதில் உயிருடன் இருக்கின்றன. எப்பொழுதாவது அது நனவு நிலைக்கு வரலாம்.

மேலதிக மன உளைச்சலால், உளக்கோளாறு ஏற்படாத வண்ணம் ஒருவன் தற்காப்பு வழிமுறைகளைக் கையாளுகின்றான். அவற்றில் புறத்தேற்றம், விளைவாக்கம், இடமாற்றம், மேம்படுத்தல் என்பன பொதுவாகக் காணக்கிடைக்கும் வழிமுறைகள் ஆகும்.

## புறத்தேற்றம்

தன்னிடமுள்ள குற்றம்குறைகளைப் பிறரிடம்இருப்பதாகக் கூறி அதன் மூலம்தனது குற்றம் குறையை மறைக்க முயவல்வர்.

## விளைவாக்கம்

ஒரு ஒழுக்கப் பிறழ்வு நடத்தை கொண்டவன், தன் தவறை உணர்ந்து, பின்னர், ஒழுக்கம் பற்றிய கொள்கைப் பரப்பலில் ஈடுபடுதலை உதாரணமாகக் கூறலாம்.

## இடமாற்றம்

அலுவலகத்தில் சினத்திற்கு இலக்காகிய ஒருவர், தன் மன உளைச்சலை வீட்டிற்கு வந்த பின் குடும்பத்தவர் மீதுகாட்டுவது. எப்பொழுதும் நம்முடன் இருப்பார்கள் என்ற உறுதியான எண்ணம் இத்தகைய இடமாற்றத்திற்குக் காரணம் ஆகின்றது.

## மேம்படுத்தல்

ஒருவன் தான் எடுத்துக்கொண்டதொரு முயற்சியில் ஏமாற்றம் அடையும் நிலையில் ஏற்பட்ட பாதிப்பினால், பாதிக்கப்படாதவாறு அவர் வேறு முயற்சிகளில் ஈடுபடும் போது அவரது முழுமையான ஈடுபாடும் முன்னேற்றத்துக்கு வழி வகுக்கிறது.

# ஆண்களிடமும் பெண்களிடமும் காணப்படும் இருபால் பண்புகளின் விளக்கங்கள்

ஆண்களிடம் பெண்மைப் பண்புகளும், பெண்களிடம் ஆண்மைப் பண்புகளும் இருப்பதையும் இருபாலினத் தன்மையையும் உளவியலாளர் 'யுங்' விளக்குகிறார்.

ஆண்களிடம் உள்ள பெண்மைப் பண்ப 'அனிமா' (Anima) எனவும் பெண்களிடம் அமைந்துள்ள ஆண்மைப் பண்பு (Animus) எனவும் கூறுகிறார்.

ஆண், பெண் இருபாலரிடமும் வேண்டுவன, வேண்டாதன, ஏற்புடையன, ஏற்பிலாதன ஆகிய பண்புகள் காணப்படும்.

பெண்கள் ஆதரவு காட்டுதல், அன்புடன் பழகுதல் ஆகிய பண்புகளைப் பொதுவாகக் கொண்டிருப்பர். ஆண்கள் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் பண்பைப் பொதுவாகக் கொண்டிருப்பர்.

மக்கள் எதிர்பார்க்கும் விதத்தில், அவர்கள் தம்மை ஏற்கும் விதத்தில் மிகுந்த முயற்சி செய்து தமது பண்புகளை மாற்றிய மைத்துக் கொள்வதை இரு பாலாரிடத்திலும் காணக் கூடியதாகவுள்ளது.

ஆண்களிடம் அமைந்திருக்கும் பெண்மைப் பண்புகள் ஒருங்கிணைந்து இயல்பான நிலையில் காணப்பட்டால், அத்தகைய ஆடவர்கள் மிகமிகச் சிறப்பான பண்புடையவர்களாகக் காணப்படுவர்.

அவர்கள் தமது மனவெழுச்சிகளை அறிந்து அதற்கேற்ப நடப்பவர்களாகவும் மற்றவர்களின் தேவைகளையும் உணர்வுகளை யும் மதித்து நடப்பவர்களாகவும் பெருந்தன்மையானவர்களாகவும் இருப்பர். படைப்பாற்றல் மிக்க ஆளுமை கொண்டவராகவிருப்பர்.

இதற்கு மாறாகப் பெண்மைப் பண்புகள் ஒருங்கிணைவு பெறாது இருப்பின் அற்பத்தனம் மிக்கவர்களாகவும், மற்றவர்களைப் பற்றித் துருவித் துருவி ஆராய்ந்து, வம்பு பேசுபவர்களாகவும் மற்றவர்களுடன் பழகும் போது திடீர் உளநிலை மாற்றங்களுக்கு உட்படுபவராகவும் இருப்பர்.

பெண்களிடம் காணப்படும் ஆண்மைப் பண்பு ஒருங்கிணைந்த நிலையில் இருப்பின் அவர்கள் வாழ்க்கையில் மெய்நிலை உணர்வு மிக்கவர்களாகவும் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் வல்லமையுள்ள வராகவும் உளச் சமநிலை கொண்டவராய் எந்தவொரு சிக்கலான நிலைமையிலும் காணப்படுபவராகவும், தன்னம்பிக்கையுடன் சுதந்திரமாகச் சிந்திப்பவராகவும், உள உறுதி படைத்தவராகவும் வாழ்க்கையின் குறிக்கோளை அறிந்தவராகவும் இருப்பர். இவர்கள் ஆண்களிடம் அமைந்திருக்கும் பெண்மைப் பண்புகளை படைப்பாற்றல் கொண்டவர்களாய் மாற்றியமைக்கும் வல்லமை கொண்டிருப்பர்.

இதற்கு மாறாகப் பெண்களிடம் உள்ள ஆண்மைப் பண்புகள் ஒருங்கே இணையாது இருப்பின், முரண்பாடான நடத்தை உடையவராகவும் ஆடவருடன் போட்டி இடுபவராகவும் பெண் என்னும் முறையில் வாழ்க்கையில் இயங்கும் முறையைத் தவிர்த்து ஆடவரின் இயங்கு முறையில் தொல்லை தருபவராகவும் வாதாடுபவராகவும் பகுத்தறிவு அற்றவராய் அளவுக்கு மீறிய மனநோக்கு உடையவராய் இருப்பர்.

**ஒவ்வொரு மனிதனின் ஆளுமையிலும் நனவிலி நிலையில் அதாவது ஆழ்மனதில் உள்ளார்ந்த குறைகள், நிழல்கள் இருக்கின்றன.**

முகமூடியின் உதவியுடன் மனிதர்கள் தங்களைச் சிறந்த இயல்பினராகக் காட்டிக் கொள்ள முயற்சி செய்கின்றனர். உள்ளார்ந்த குறைகள், அவர்களின் இயல்புகள் வாயிலாக உள்ளவாறு காட்டிக்கொடுக்கும்.

**முழுமையாக நல்லியல்பு கொண்ட மனிதர்கள் உலகில் இருந்தால் அவர்களுடன் ஏனையவர் இசைந்து நடப்பது மிக மிக அரிது.**

## ஆளுமைக் கோளாறுகள்

ஒரு தனிமனிதனின் சமூகச் செயற்பாடுகளில் வெளிப்படும் அசாதாரண நடத்தைக் கோலங்கள், ஆளுமைக் கோளாறுகள் எனப்படும்.

ஆளுமைக் கோளாறுகள் உடையவர்கள் பெரும்பாலும் தாம் தொல்லைக்கு உட்படுவதில்லை. ஏனெனில் அவர்கள் தம்மை இயல்பு நடத்தையினராக எண்ணுகின்றனர்.

இவர்களால் பாதிக்கப்படுவது அவரைச் சார்ந்ததும் சூழ்ந்ததுமான மற்றவர்களே எனக் கூறலாம்.

❒ ❒ ❒

# ஆளுமைக் கோளாறுகளும் நடத்தைக் கோலங்களும்

## உளக்கோளாறுசார் செருக்கு :

இவர்கள் தம்முடைய ஏற்கமுடியாத பண்புகளைத் தாமே ஏற்கக் கூடிய பண்புகளாகத் தம்மை மிக்க சிறந்தவர்களாகவும் மற்றவர்களை அறிவிலிகளாகவும் எண்ணுகின்றனர்.

மனித நடத்தையானது ஒருவனது இயக்கம், குரல் நாண்களின் அசைவுகள், உள் உறுப்புகளின் இயக்கத்திலிருந்து எழும் நடத்தைகள் என மூன்று வகையாகப் பார்க்கப்படும்.

ஒரு தூண்டலினால் துலங்கல்கள் வெளிப்படும்போது அவற்றுக்கு இடையேயான தொடர்பினால் உருவாகும் எதிர்வினையே நடத்தையாகும்.

## கருத்துத்திரிபு ஆளுமை (Paranoid Personality)

இவர்களிடம் சந்தேக மனப்பான்மையும் மற்றவர்களிடம் நம்பிக்கையின்மையும் காணப்படும். மிகவும் சிறிய செயற்பாடுகளிலும் மிகுந்த கவனம் செலுத்துபவர்களாக இருப்பர். ஆனால் அதே நேரத்தில் மிகச் சிறிய செயற்பாடுகளிலும் சந்தேகம் கொள்வர்.

தமது இந்த நம்பிக்கையில்லா மனப்பான்மையை எடுத்துக் கூறுபவரிடம் சந்தேகப்படுவர்.

இவர்கள் அளவுக்கதிகமான விழிப்பு நிலையில் எப்பொழுதும் இருப்பதால், எப்பொழுதும் தம்முள்ளே ஒரு விதமான அச்சுறுத்தலை உணர்கின்றவர்களாகக் காணப்படுவர்.

பெரும்பாலும் நட்பை விரும்பமாட்டார்கள். தனிமையையே விரும்புவார்கள். மிக விரைவில் கோபப்படுவார்கள்.

மற்றவர்களின் நடத்தையையும் செயல்களையும் மிகவும் கண்காணித்த வண்ணம் இருந்து ஆய்வு செய்வார்கள். யாராவது இவர்கள் மீது குற்றம் கண்டால் அவர்களை வெறுப்பார்கள்.

## உளச்சிதைவு ஆளுமை (Schizoid Personality)

இவர்கள் மற்றவர்களிடம் இருந்து ஒதுங்கித் தனிமையாக இருப்பதை விரும்புபவர்களாக இருப்பர். பயனுள்ள சமூகத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியாதவர்களாய் இருப்பர்.

மற்றவர்களின் துன்பங்களைப் பற்றி இரக்கமோ கவலையோ

கொள்ள மாட்டார்கள். இவர்கள் தனித்துத் தாமாகவே செய்யக் கூடிய பணிகளிலேயே ஈடுபடுவார்கள். மற்றவர்களிடம் தமக்குள்ள பகைமையை வெளிக்காட்ட மாட்டார்கள்.

அவர்கள் தம்மைப் புகழும் போது எதுவித எதிர்வினையும் காட்டாது சர்வ சாதாரணமாக இருப்பதை அவதானிக்கலாம்.

## தவிர்ப்பு ஆளுமை (Avoiding Personality)

இவர்கள் மற்றவர்களால் வெறுக்கப்படுவதையோ அவமானப் படுவதையோ பொறுத்து கொள்ள முடியாதவர்கள். மற்றவர்களால் குறை கூறப்படுவதைத் தாங்க முடியாதவர்கள்.

எனவே அப்படிப்பட்ட சூழ்நிலையை மட்டும் தவிர்க்கின்றனர். இவர்கள் மற்றவர்களை விரும்புகின்றனர்.

## வரம்பு ஆளுமை (Borderline Personality)

இவர்களது நடத்தை நிலையற்றதானதாகக் காணப்படும். மன நிலை திடீர் திடீரென மாறுவதை அவதானிக்கலாம்.

சில நேரத்தில் சாந்தமாகவும் அடுத்த கணமே சினம் கொள்பவராகவும் காணப்படுவர். இவர்கள் அடக்க முடியாத அளவு கோபம் கொள்ளும் நடத்தையினராகக் காணப்படுவர். சில சமயங்களில் தன்னைத் தானே வருத்தவும் கூடும்.

## நடிப்பு ஆளுமை (Histrionic Personality)

இவர்கள் மற்றவர்களது துன்பம் பற்றி கவலைப்பட மாட்டார்கள். தமது வாழ்கையில் முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்ட ஒரு சிறிய நிகழ்ச்சியையும் மிகுந்த மன எழுச்சியுடன் வெளிப்படுத்துவர். அநேகமாக மற்றவர்களைச் சார்ந்து இருப்பவர்களாகக் காணப்படுவர்.

தமது துயரங்களே இவர்களுக்குப் பெருந் துயராகவும் தம் மகிழ்ச்சியை மாபெரும் மகிழ்ச்சியாகவும் கொள்வர்.

தம்மைப் பற்றியே பேசிப்பேசி மற்றவர்களைச் சலிப்படையச் செய்வர். எப்பொழுதும் தன்னலம் மிக்கவரான இவர்கள், எளிதில் நட்புக் கொள்வார்கள். ஆனால் இவர்களது கவனம் தம் பக்கமே இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பார்கள்.

அதற்கேற்றவாறு தம் நடத்தையைச் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்வர்.

## தன் வழிபாட்டு ஆளுமை

இவ் வகையான ஆளுமையினர் மற்றவர்கள் தம்மை எப்பொழுதும் புகழ வேண்டும் என்று விரும்புவர்.

தம்மைப் பற்றியே மிக உயர்ந்த கருத்தைக் கொண்டிருப்பர். தமது திறமைகளிலான வெற்றியின் கனவிலேயே மிதந்து கொண்டிருப்பர்.

மற்றவர்கள் தம்மைக் குறைகூறுவதையோ பொருட்படுத்தாமை யையோ அணுவளவும் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள்.

மற்றவர்களின் உணர்ச்சிகள் விருப்பு வெறுப்புகள் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள்.

## சார்புநிலை ஆளுமை (Dependent Personality)

தன் வாழ்க்கையின் முதன்மையான பொறுப்புகளை மற்றவர் களின் பொறுப்பில் விட்டு விடுவர். அவ்வாறு தமக்காகப் பொறுப்பு ஏற்பவர்களை எப்பொழுதும் தம்முடனேயே வைத்துக்கொள்வர். எவ்வளவு பிரச்சினைகள் வந்தாலும் அவர்களை விட்டுப் பிரியாமல் சார்ந்தே வாழ்வர்.

## கட்டாய ஆளுமை (Compulsive Personality)

இவர்கள் வாழ்க்கையின் கட்டுப்பாட்டு விதிகளுக்கும் ஒழுங்கு முறைகளுக்கும் பிரதான இடம் கொடுப்பவர்களாக இருப்பர்.

இவர்கள் நகைச்சுவை அற்றவர்களாய் தமது வேலையே முக்கியமானது எனக் கருதி நடப்பவர்கள்.

எந்தவொரு பணியையும் சரியாகச் செய்வதற்கு தான் செய்யும் வழி முறை தான் சரியானது எனக் கருதிக்கொண்டு செய்வதோடு தான் செய்யும் ஒவ்வொரு செயலிலும் நிறைவை எதிர்பார்ப்பார்கள்.

சமூகத் தொடர்புகளில் அக்கறை மிகக் குறைவாகவே காணப்படும்.

## பணிவு - தாக்குதல் ஆளுமை (Passive - Agressive Personality)

வேலையில் திறமையின்மை, வேலையில் மறதி, பிடிவாதம் உறுதியின்மை போன்ற இயல்புகளால் பணிவெதிர்ப்பினை இவர்கள் வெளிப்படுத்துவார்கள்.

மற்றவர்கள் தம்மிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கிறார்கள் என்றே கூறிக்கொள்வார்கள்.

## சமூக எதிர்ப்பு ஆளுமை (Anti Social Personality)

குழந்தைப் பருவத்திலேயே உருவாகிவிட்ட பிழையான நடத்தைகள் வயது வந்த பருவத்தில் தொடர்ந்து காணப்படுவது இந்த வகை ஆளுமையினரில் ஆகும்.

பொய் கூறுதல், பாடசாலை செல்லாமை, வீட்டிற்கு வராமல் வெளியே தங்கி விடுதல். பாடசாலை செல்லாமல் விடுதல், திருடுதல், பிறர் தம்மை அதிகாரம் செய்வதை எதிர்த்து நிற்றல் போன்ற

நடத்தைகள் இவர்களில் குழந்தைப் பருவத்திலேயே உருவாகி வயது வந்த பருவத்திலும் தொடர்ந்து காணப்படுகின்றது.

இவ்வகை ஆளுமையினரிடம் காணக் கூடிய பல பண்புகளைப் பார்ப்போம்

- மிகையான நுண்ணறிவு, கவர்ச்சி, நட்பு ஆகிய பண்புகள் மூலம் இவர்கள் வரவேற்கத்தக்க முதற் கருத்துப் பதிவை (First Impression) ஏற்படுத்துவர். இவர்கள் பதற்ற நிலை அடையாதவர்—களாய் எப்பொழுதும் காணப்படுவர்.
- பொறுப்பற்ற தன்மை உடையவராய், தம்மைச் சார்ந்திருப் போரிடம் கூட பொறுப்பு இல்லாதவராய் இருப்பர்.
- இவர்கள் பொய் வயப்பட்டவர்கள். எப்பொழுதும் பொய்யே கூறிக் கொண்டு காலத்தை ஓட்டிக்கொள்வர்.
- உண்மையை, உண்மை கூறுவதை ஏளனம் புரிபவர்கள். நம்பிக்கை வைக்கப்பட முடியாத ஆளுமையினர். வாக்குறுதிகளைக் காப்பாற்ற மாட்டார்கள்.
- மற்றவர்களுக்கு நன்கு துன்பம் விளைவிப்பதோடு அதற்காக வருந்தவே மாட்டார்கள்.
- தூண்டுதலின்றியே சமூக எதிர்ப்புச் செயல்களில் ஈடுபடுவார்கள்.
- இவர்கள் உண்மையில் விவேகம் அற்றவர்கள்.
- தமது செயல்களினால் வந்த விளைவுகளே என்ற போதிலும் மனம் வருந்தாது இருப்பர்.
- சந்தோஷமான மனவெழுச்சிகள் ஏற்படும் போதும் அதை உணராதவர் போல் இருப்பர்.

- தன்னைத்தான் உள்நோக்கிப் பார்க்கும் இயல்பு இன்றி அதன் மூலம் தன்னைச் சீராக்கும் எண்ணம் அற்றவராகவே இருப்பர்.

- நிகழ்காலம் சம்பவங்களில் வாழும் இவர்கள் ஒரு இலக்கு அற்றவர்களாய் இருப்பர்.

- சொந்த வாழ்க்கையில் இல்லற உறவு நிறைவாகவோ நிலைத்ததாகவோ இருக்காது.

- இவர்கள் மிகவும் விசித்திரமான நடத்தை உடையவர்களாய் இவர்களைச் சார்ந்தோருக்கு எப்பொழுதும் வேதனையையே தருபவர்களாக இருப்பர்.

சமூக எதிர்ப்பு ஆளுமையின் பண்புகளுக்கு பரம்பரைக் காரணிகளே காரணமாக இருக்கலாம் என உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

ஒரு சிறப்பு உயிரணு மேலதிகமாக உயிரணுப் பிரிவில் காணப்படுவதே இதற்குக் காரணம் என ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

மின்மூளை மானியின் உதவியுடன் செய்யப்பட்ட ஆய்வுகள் இத்தகையோரிடம் மூளை அலைப் பிறழ்வுகள் அதாவது மின் மூளை அலைகள் முதிர்ச்சி அடையாத நிலையில் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.

குழந்தைப் பருவத்திலிருந்து குடும்பச் சூழ்நிலையும் இவர்களது சில நடத்தைகளுக்குக் காரணமாக இருக்கலாம்.

இவர்களது 'நனவடி' தளத்தில் பயனுள்ள நன்மதிப்புள்ள கருத்துக்கள் அமைவதற்கும் உருவாகுவதற்கும் இவர்களது பெற்றோர்கள் இவர்களுக்கு உறுதுணையாக இருக்காத காரணத்தினால் இவர்கள் 'நனவிலி' மனதின் ஒடுக்கல்களின் கட்டளைகளுக்குப் பணிந்து செயற்படுபவர்கள் ஆகின்றனர்.

❒ ❒ ❒

# தனியாள் ஆளுமை வளர்ச்சியில் ஒரு மீள்பார்வை

ஆளுமை வளர்ச்சியில் ஒரு பிள்ளை ஐந்து உளப் பாலியல் வளர்ச்சிப் பருவங்களைத் தாண்டுகின்றது.

அவையாவன வாய்வழி இன்ப நிலை, குதவழி இன்ப நிலை, இலிங்க வழிக் கட்டம், பாலுறைக் காலம், பாற்குறிக் கட்டம் என்பனவாகும்.

பிறப்பு முதல் 2 வயது வரையான வாய்வழி இன்ப நிலையில் குழந்தையானது சுவைத்தலால் இன்பம் பெறுகின்றது.

2 வயது முதல் 3 வயது வரை மலம் வெளியேற்றுவதன் மூலமும் மலத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் இன்பத்தைப் பெறுகின்றனது. இது குதவழி இன்ப நிலை எனப்படும்.

3 வயது முதல் 6 வயது வரையான பருவம் இலிங்க வழிக் கட்டம் எனப்படும். இக் கட்டத்தில் தொடுகை மூலம் அறிதல் நடைபெறுகின்றது.

7 வயது தொடக்கம் 11 வயது வரையான பாலுறைக் கால கட்டத்தில் உலகத் தொடர்புகள் ஏற்படுகின்றன. சமூக, ஒழுக்க, அறிவு வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றன. புதிய விடயங்களில் நாட்டம் அதிகரிப்பதால் மேற்கூறிய ஆசைகள் அமைதி நிலைக்கு உட்படுகின்றன.

11 வயதில் தொடங்குகின்ற பாற்குறிக் கட்டத்தில் உடலியல்

ரீதியான பாலியல் முதிர்ச்சி நிலை தோன்றி, பாலியல் இன்பத்தைப் பெற்றுக்கொள்ளும் விருப்பம் உண்டாகிறது.

குழந்தைப் பருவம் பாலுறுப் பாதிப்புகளே முதன்மைப் பண்புகளாக ஆளுமைக் கோட்பாட்டிற்கு அமைகின்றன. எனினும் ஐந்து கட்டங்களில் ஆளுமைக் கோட்பாட்டிற்கு முக்கியமாக அமைகின்றன.

குழந்தைப் பருவப் பாலுமை வளர்ச்சி நிலையில் மிகைக் கட்டுப்பாடு அல்லது கட்டுப்பாடின்மை ஆளுமைப் பிறழ்வை ஏற்படுத்துகின்றது என பிராய்ட் கூறுகிறார்.

குறிப்பாகக் குதவழி இன்ப நிலையில் பெற்றோர்கள் தம் பிள்ளைகளை மலம் கழித்தல் தொடர்பான பழக்க வழக்கங்களில் அளவுக்கு மிஞ்சிய கட்டுப்பாடுகளை வைக்கக் கூடாது என்பது உளவியலாளர் பிராய்டின் கருத்தாகும்.

இக் கட்டத்தில் இடம்பெறும் கட்டுப்பாடு தண்டனைகளுடன் கூடிய அடக்கு முறைத் தன்மை போன்றவற்றிற்கு ஒரு பிள்ளை 'எதிர்வினை' காட்டும் சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கொண்டிருக்கும். கோபத்தினால் ஒழுங்கீனம், கொடுமை, நாசகாரத் தன்மை போன்ற மனப்பாங்கு கொண்டவனாய் வளர்ச்சி அடையும்.

இது தொடர்ந்து வளரச்சிப் பருவங்களூடே நீண்ட கால ரீதியாக மிகக் கடுமையான மன எழுச்சிகளை எடுத்துச் செல்லக்கூடும்.

எனவே, இக்கட்டத்தில், குழந்தையானது மிகைக் கட்டுப்பாடு, கட்டுப்பாடின்மை இரண்டுக்கும் இடையேயான மிதமானதொரு குணாதிசயத்தைப் பெற்று சமநிலை ஆளுமையை அடைய வேண்டும்.

இல்லாவிட்டால் ஆளுமைப் பிறழ்வு ஏற்படலாம். இவ்வகையான ஆளுமை குதவழிநிலை ஆளுமை எனப்படுகிறது.

முதல் மூன்று பருவங்களாகிய வாய், குதம், இலிங்கம் ஆகிய பருவங்களில் குழந்தை போதிய அளவிலான திருப்தியைப் பெறுவதற்கு இடமளிக்க வேண்டும்.

இக் கால கட்டத்தில் விரக்தி நிலை ஏற்பட்டால் பிள்ளையின் எதிர்கால ஆளுமையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை உளவியலாளர் சிக்மன் பிராய்ட் வலியுறுத்துகிறார்.

❐ ❐ ❐

## திருமதி.இராஜினி தேவராஜன்

திரு.திருமதி.லோகநாதனின் புதல்வியும், யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியுமான இவர் யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

தனது ஆரம்பக்கல்வியை மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் கல்லூரியிலும் வத்தளை அர்ச்.அன்னம்மாள் பாடசாலையிலும் பயின்றவர். தனது க.பொ.த(உயர்தரம்) கல்வியை இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியில் பயின்று தேர்ச்சி பெற்ற இவர். லண்டன் ஐ.சி.எம்.ஏ கற்கை நெறியில் பகுதித் தேர்ச்சியுடன் அக்பார் பிரதர்ஸ் லிமிடெட் கொழும்பு, சிலோன் டீ மார்க்கட்டிங் லிமிடெட்-கொழும்பு ஆகிய நிறுவனங்களில் உதவிக் கணக்காளராக நீண்ட காலம் பணியாற்றியவர்.

ஆன்மீகத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் பத்திரிகைகளுக் கும் இதழ்களுக்கும் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் வெளியிடப்படும் மாத இதழ் "இந்து சாதனம்" இதழ் மூலம் தமது ஆன்மிகக் கட்டுரைகளை வெளியிட்டார்.

தற்போது தமிழ்ப் பட்டயச் சான்றிதழ்க் கற்கை நெறியிலும் உளவியல் பட்டயச் சான்றிதழ்க் கற்கை நெறியிலும் தேர்ச்சி பெற்றுள்ளார்.